بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 26

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

03 துல்கஅதா 1441 ஹிஜ்ரி கமரி 25 இஹ்ஸான் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

25 ஜூன் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ يُدْخِلْهُ جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا ؕ وَذٰلِكَ الْفَوْزُ الْعَظِيْمُ ﴿۱۴﴾

அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பவர்களை அவன் கீழே ஆறுகள் ஓடுகின்ற தோட்டங்களில் நுழையச் செய்வான். அவர்கள் அவற்றில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருப்பர். இதுவே பெரும் வெற்றியாகும். (4:14)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**மனிதன் இறைவனுடன் அன்பு செலுத்துவானேயானால், தண்ணீரைப் போன்று அவன் பக்கம் குனிவான் என்றால் பிறகு அவன் கருணையாளன் ஆவான். அன்பு செலுத்தக்கூடியவரை விட அவன் அவனிடம் அதிகமாக அன்பு செலுத்துகின்றான். அந்த இறைவன் எப்படிப்பட்டவன் என்றால், அவன் தனது அன்பிற்குரியவர்கள் மீது அருட்களை பொழிகின்றான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### எனது கூற்றை வீணாக்காதீர்கள்

வாழ்க்கையின் இன்பமானது வாழ்க்கையில் இன்பமும், மகிழ்ச்சியிலும்தான் இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் அவன் எல்லா வகையிலும் அமைதிகரமாகவும், நிம்மதியாகவும் இருக்கின்றபோதுதான் அவன் உயிருள்ளவனாக இருக்கின்றான். அவனுக்கு ஏதாவதொரு வலி உதாரணமாக, பல் வலியினால் அவதிப்பட்டாலும் கூட அவன் மரணித்தவர்களை விட மோசமானவனாக ஆகி விடுகின்றான். அவன் எத்தகைய நிலையில் இருக்கின்றான் என்றால் அவன் மரணித்திருக்கவும் மாட்டான்; மேலும் உயிருடன் இருக்கின்றான் என்றும் கூற முடியாது. எனவே இவற்றிலிருந்து நரகத்தின் கடுமையான தண்டனை எத்தகைய மோசமான நிலையாக இருக்கும் கற்பனை செய்து பாருங்கள்.

### எவர் தனது வாழ்க்கையில் இறைவனோடு உள்ள தொடர்பை முறித்துக் கொள்வாரோ அவரே குற்றவாளி ஆவார்

எவர் தனது வாழ்க்கையில் இறைவனோடு உள்ள தொடர்பை முறித்துக் கொள்வாரோ அவரே குற்றவாளி ஆவார். அவனிடம் இறைவனுக்காகவே ஆகி விட வேண்டும் என்றும், நல்லவர்களுடன் இணைந்திருக்க வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டிருந்தது. ஆனால் அவன் தீயவர்கள், இறைவன் மற்றும் அவனது ரஸூலின் எதிரிகளுடன் தொடர்பு வைத்திருந்தான். அவன் தனது செயலின் மூலமாக இறைவனுடன் தொடர்பை முறித்துக் கொண்டதை வெளிப்படுத்தினான்.

இறைவனது நடைமுறை என்னவென்றால், மனிதன் எங்கு அடியெடுத்து வைப்பானோ அதன் எதிர் புறத்திலிருந்து அவன் தொலைவில் சென்று கொண்டே இருப்பான். மேலும் அவன் இறைவனை விட்டு தனியாகச் சென்று மன இச்சையை பின்பற்றக்கூடிய அடியானாக ஆகி விடுகின்றான்.

மனிதன் அவ்வாறு ஆகிவிடும்போது இறைவனும் அவனை விட்டு விலகி விடுகின்றான். (இறைவனை விட்டு) அவனுக்கு மற்றொரு இடத்தில் அவனுக்கு தொடர்பு அதிகரிக்கும்போது இங்கு அவனது தொடர்பு குறைந்து விடுகின்றது.

எனவே இறைவன் செயல் ரீதியாக தனது செயலை வெளிப்படுத்தும்போது அவன் விழிப்படைந்து விட்டான் என்பதை புரிந்து கொள்ளுங்கள். மேலும் மனிதன் இறைவனுடன் அன்பு செலுத்துவானேயானால், தண்ணீரைப் போன்று அவன் பக்கம் குனிவான் என்றால் பிறகு அவன் கருணையாளன் ஆவான். அன்பு செலுத்தக்கூடியவரை விட அவன் அவனிடம் அதிகமாக அன்பு செலுத்துகின்றான். அந்த இறைவன் எப்படிப்பட்டவன் என்றால், அவன் தனது அன்பிற்குரியவர்கள் மீது அருட்களை பொழிகின்றான். அவன் (இறைவன்) அவர்களுடன் இருக்கின்றான் என்பதை உணர்ந்து கொள்ளச் செய்கின்றான்.

எதுவரை என்றால் அவனது பேச்சிலும், அவனது நாவிலும் அருட்களை வைத்து விடுகின்றான். மேலும் மக்கள் அவனது ஆடைகளிலிருந்தும், அவனது அருட்களிலிருந்தும் அருட்களை பெறுகின்றனர். முஹம்மதிய்ய சமுதாயத்தில் இதற்கான தெளிவான ஆதாரம் என்னவென்றால், எவர் இறைவனுக்காக ஆகி விடுகின்றாரோ இறைவனும் அவனுக்காக ஆகி விடுகின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 122,124 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### ஈமானை வலுப்படுத்துவதற்காகவும், இறைவனின் இருப்பை மக்களுக்கு நிரூபித்துக் காட்டுவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்

ஈமானை வலுப்படுத்துவதற்காகவும், இறைவனின் இருப்பை மக்களுக்கு நிரூபித்துக் காட்டுவதற்காகவும் நான் அனுப்பப்பட்டுள்ளேன். ஏனென்றால், ஒவ்வொரு சமுதாயத்தின் ஈமானின் நிலைமைகள் மிகவும் பலகீனமானதாக ஆகிவிட்டது. மறுஉலகம் என்பது ஒரு கதையாக மட்டுமே கருதப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் தனது செயல் அளவிலான நிலைமை மூலமாக அவன் எந்த அளவு உலகம் மற்றும் உலகின் தகுதிகள் மீது உறுதி கொள்கின்றானோ, எந்த அளவுக்கு உலக காரணிகள் மீது நம்பிக்கை இருக்கின்றதோ அதே போன்ற உறுதியும், நம்பிக்கையும் அவனுக்கு இறைவன் மீதும் மறு உலகத்தின் மீதும் ஒருபோதும் இல்லை. நாவுகளில் பல விஷயங்கள் கூறப்படுகின்றது. ஆனால் உள்ளங்களில் உலகின் மீதுள்ள நேசம் மிகைத்து நிற்கின்றது.

(கிதாபுல் பரிய்யா பக்கம் 291 , ரூஹானி கஸாயின் தொகுதி 13)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**காலத்தின் கலீஃபாவும் ஜமாஅத்தும் ஒரே இருப்பின் இரண்டு பெயர்களாகும்**

**இன்றைய நாட்களில் எந்த நிலையை நாம் கடந்து கொண்டிருக்கின்றோமோ இதில் குறிப்பாக அல்லாஹ்வின் பக்கம் குனிவதன் அவசியம் உள்ளது**

**இன்றைய காலகட்டத்தில் ஏற்பட்டு வருகின்ற இந்த தண்டனைகள், பேரழிவுகள் போன்றவற்றிற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்துடன் குறிப்பான தொடர்பு இருக்கின்றது. எனவே நாம் நமது ஈமான் மற்றும் நிச்சய உறுதிக்காகவும், நல்ல முடிவை பெறுவதற்காகவும் அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டும். மேலும் உலகை காப்பாற்றுவதற்காகவும் துஆக்கள் செய்ய வேண்டும்**

**இந்த சோதனைக்குரிய நாட்களில் தமது மன இச்சையை அழித்து விட்டு இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். நான் இந்த விஷயத்தை கூறுவதன் நோக்கம் இதுவே ஆகும். அதாவது நீங்கள் அறிவுரை மற்றும் படிப்பினை பெற வேண்டும். உலகம் அழியக்கூடிய இடமாகும். இறுதியில் மரணிக்க வேண்டியதுள்ளது. மார்க்க விஷயங்களில் செயல்படுவதன் மூலமே மகிழ்ச்சி கிடைக்கும். உண்மையான நோக்கமும் மார்க்கமே ஆகும்**

**தற்போதுள்ள நிலைமையில் அஹ்மதிகள் பாதுகாப்பாக இருப்பதற்கும், ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காகவும், பொருள் தியாகம் செய்பவர்களுக்காகவும், MTA பணியாளர்களுக்காகவும் மேலும் இஸ்லாமிய உலகின் ஒற்றுமைக்காகவும் துஆ செய்வதன் பக்கம் ஹுஸூர் அவர்கள் கவனமூட்டினார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 மே 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **22 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

நான் கடந்த நாட்களில் கீழே விழுந்ததன் காரணமாக, காயம் ஏற்பட்டதன் காரணமாக அசாதாரணமான தங்களின் உணர்வை வெளிப்படுத்தியுள்ள அந்த அஹ்மதிகள் அனைவருக்கும் முதலில் நன்றி கூற ஆசைப்படுகிறேன். மிகவும் வேதனையுடன் துஆக்களும் செய்துள்ளார்கள். அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இதற்கான மிகச் சிறந்த நற்கூலியை வழங்குவானாக. பற்றுணர்விலும், விசுவாசத்திலும் மேலும் முன்னேறச் செய்வானாக. இக்காலத்தில் இறைவனுக்காக, அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கேற்ப ஒருவருக்கிடையில் நேசம் கொள்வது என்பது, அதிலும் குறிப்பாக காலத்தின் கலீஃபாவுக்காக பற்றும், விசுவாசமும் கொள்ளுதல் என்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தில்தான் காணக் கிடைக்கும்.

இரண்டு புறமும் காணப்படக்கூடிய இந்நேசமும் அல்லாஹ்வால் உருவாக்கப்பட்டதாகும். யார் மற்றவருக்காக அதிக வேதனை கொள்கிறார் என்று இங்கு கண்டுபிடிக்க இயலாது. அஹ்மதிகள் கிலாஃபத்தின் மீது கொண்டுள்ள நேசம் உச்சத்தை அடைந்ததாக சில சமயங்களில் தெரிகிறது. ஜமாஅத்தின் உறுப்பினர்களுடன் காலத்தின் கலீஃபாவின் தொடர்பும், நேசமும் எந்த அளவு உள்ளதென்றால் சில நபர்களை உதாரணமாக காணும்போது அந்த அளவு தரம் மிக்கதாக இருப்பதாக தெரியவில்லை. ஆனால் இது இரண்டு புறமுள்ள நேசமாகும். தொடர்பாகும்.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று இதுபோன்ற நேசத்தின் உதாரணத்தை உலக உறவில் நாம் காண முடியாது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் ஒரு வாக்கியம் எனக்கு ரொம்ப பிடிக்கும்.

அது என்னவென்றால், காலத்தின் கலீஃபாவும், ஜமாஅத்தும் ஓர் உடலின் இரு பெயர்களாகும்.

(குத்பாத்தே நாஸிர் தொகுதி 4 பக்கம் 423, குத்பா ஜுமுஆ 29 செப்டம்பர் 1972)

அல்லாஹ்வுடைய அருளால் அசாதாரண முறையில் விரைவில் காயம் குணமாகிவிட்டது. இது உங்களுடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் விளைவேயாகும். முகத்தில் உள்ள காயம் பொதுவாக சீக்கிரம் குணமாகி விடும் என்று டாக்டர் சாஹிப் என்னிடம் கூறினார்கள். ஆனால் எவ்வளவு விரைவாக இக்காயம் குணமாகியுள்ளது என்றால் இவ்வளவு சீக்கிரமாக குணமாகும் என கருதவில்லை என டாக்டர் சாஹிப் கூறினார்.

நான் அவர்களுக்கு கூறியது என்னவென்றால், மருத்துவம் ஒருபுறம் இருக்கட்டும். ஆனால் அசல் விஷயம் என்னவென்றால், அஹ்மதிகள் செய்து வருகின்ற துஆக்களேயாகும். பல காயங்கள் உள்ளன. அது குணமடைய குறைந்தது இரண்டு வாரங்களாகும். அதன் பிறகு காயங்களின் வடுவும் அப்படியே இருக்கும் என நான் கருதினேன். ஆனால் அல்லாஹ்வின் அருளால் 7,8 நாட்களிலேயே முற்றிலும் சுத்தமாக குணமாகிவிட்டது. இந்த காயத்தின் காரணமாக எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் நான் கூறிவிடுகிறேன்.

மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் ஈஸா களிம்பு தயாரித்து எனக்கு அனுப்பி வைத்தார்கள். அதை நான் உபயோகித்தேன். இதேபோன்று ஹோமியோபதி கிரீம் காலன்டுலாவையும் உபயோகித்தேன்.

எவ்வாறிருப்பினும் உண்மையான அருள் அல்லாஹ்வின் அருளாகும். அவனே குணமளிக்கக்கூடியவனாவான். மருந்துகளைப் பற்றி ஏன் கூறினேன் என்றால், அது மற்றவர்களுக்கும் பயனாக இருக்கும் என்பதால் கூறினேன். சில சமயங்களில் அவசியப்படுகிறது. காயங்களின் மீதுள்ள விளைவுகளை அல்லாஹ் விரைவாக நலமாக்கவும், அதன் தீய விளைவுகளை நீக்கவும் துஆ செய்யுங்கள். துஆக்களின் மூலம் கிடைக்கின்ற அல்லாஹ்வின் அருளே உண்மையான ஆற்றலாகும். கொஞ்ச காலத்திற்கு முன்பு எனது தோள்களிலும், கைகளிலும் கடுமையான வலி இருந்தது.

கையை தூக்க கடினமாக இருந்தது. அடுத்த கையின் உதவியை நாட வேண்டியதிருந்தது. இங்கு சிறப்பு மருத்துவர்களிடம் காட்டினேன். அவர் என்ன கூறினார் என்றால், இந்த வலி ஆறு வாரங்கள் முதல் மூன்று, நான்கு மாதங்கள் வரை இருக்கும் என்றார்.

சில நாட்களுக்குப் பிறகு அவர் மீண்டும் மேற்பார்வையிட்டார். அப்போது 90% வலி குணமாகியிருந்ததை கண்டு அவர் மிகவும் வியப்படைந்தார். இலட்சக்கணக்கான மக்கள் துஆ செய்யும்போது இவ்வாறுதான் அல்லாஹ் அருள் செய்கிறான் என்று நான் அவரிடம் கூறினேன். அவர் ஆங்கிலேயராக இருந்தார்.

அவர் கூறினார்: நான் கிறிஸ்தவனாகவும் உள்ளேன்; எனது குடும்பம் மத நம்பிக்கையுள்ள குடும்பமுமாகும். துஆக்களின் மீது எனக்கும் நம்பிக்கை உள்ளது. இது நிச்சயமாக துஆவின் மூலமே நடந்தது என்றார்.

ஆகவே அல்லாஹ்வின் அருளையே நாம் எந்நேரமும் வேண்டிக் கொண்டிருக்க வேண்டும். மேலும் அவன் முன் குனிய வேண்டும். தற்காலத்தில் நாம் எவ்வாறான சூழ்நிலையை கடந்து கொண்டிருக்கின்றோம் என்றால் இதில் குறிப்பாக இறைவன் முன் குனியக்கூடிய தேவை உள்ளது. யூ.கே–விலிருந்தும் அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த சூழ்நிலையில் அல்லாஹ்வின் பக்கம் குனிவதில் ஜமாஅத்தினர்களுக்கு அதிக கவனம் ஏற்பட்டுள்ளது என்று மற்ற நாடுகளிலிருந்தும் அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஊரடங்கின் காரணமாக வீடுகளில் குறிப்பாக வீட்டிலுள்ளவர்கள் அனைவரும் இணைந்து ஜமாஅத்தாக தொழுவதற்கு ஏற்பாடு செய்கின்றனர். தர்ஸும் நடக்கிறது. ஏதேனும் ஹதீஸ் நூலிலிருந்தோ அல்லது திருக்குர்ஆனின் தர்ஸோ நடக்கிறது. இதன் காரணமாக பெரியவர்களின் மார்க்க அறிவும் வளர்கிறது. குழந்தைகளுக்கும் மார்க்க விஷயங்கள் தெரிய வருகிறது.

அல்லாஹ்வின் மீதுள்ள நம்பிக்கையில் முன்னேற்றம் ஏற்படுகிறது. இது அல்லாஹ்வின் அருளாகும். இந்த சூழ்நிலையில் ரமலானும் வந்து விட்டது. இறைவணக்கத்தின் பக்கம் மக்களுக்கு ஏற்பட்ட கவனத்தில் முன்பைவிட அதிக முன்னேற்றம் ஏற்பட்டு விட்டது. இப்போது ரமலான் முடிவடைந்து கொண்டிருக்கிறது. அதேபோன்று அரசாங்கமும் ஊரடங்கு கட்டுப்பாட்டில் ஓரளவுக்கு தளர்வை கொண்டு வர விரும்புகிறது. பல்வேறு அரசாங்கங்கள் ஊரடங்கை தளர்த்தி விட்டன.

இங்கு ஒரு விஷயத்தை நான் கூற விரும்புகிறேன். ஊடரங்கு தளர்வுடன் அரசாங்கம் விதித்துள்ள நிபந்தனைகளுக்கு ஒவ்வொரு அஹ்மதியும் கட்டுப்பட முயற்சி செய்ய வேண்டும். ஆனால் ஒவ்வொரு அஹ்மதியும் தம் முன் வைக்க வேண்டிய முக்கிய விஷயம் என்னவென்றால், வியாபாரம் செய்வதற்கான அனுமதியாலும், வெளியே செல்வதற்கான கட்டுப்பாடுகளில் உள்ள தளர்வாலும், அதேபோல் ரமலான் மாதம் கடந்து விடுவதாலும் எந்த அஹ்மதியும் இறைவணக்கத்திலும், அவர் செய்து வந்த நன்மையை முடிக்கவோ அல்லது குறைக்கவோ செய்துவிடக்கூடாது.

பள்ளிவாசலுக்கு செல்வதற்கு கட்டுப்பாடு இருக்கும் வரை ஜமாஅத்தான தொழுகைகளை வீடுகளிலேயே தொழுது கொள்ள வேண்டும். அவ்வாறே ஒருவர் செய்து வந்த நன்மைகளையும் அவர் தொடரச் செய்ய வேண்டும். பள்ளிவசாலுக்கு செல்வதற்குரிய அனுமதி கிடைக்கும் பட்சத்தில் பள்ளிவாசலை நிரப்புவதை முன்பைவிட ஒருவர் தம்மீது அதிக கடமையாக்கிக் கொள்ள வேண்டும். பெண்கள் வீடுகளில் தொழுகைக்கான சிறப்பான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இதன் மூலம் குழந்தைகளும் தமக்கு முன் ஒரு முன்மாதிரியை காண்பார்கள்.

இறைவன் மீது அவர்களுக்கும் நம்பிக்கையும், உறுதியும் அதிகரிக்கும். வீடுகளில் சில நிமிட தர்ஸுக்கான ஏற்பாடும் தொடர வேண்டும். இதன் காரணமாக மார்க்க அறிவும் வளரும்; கல்வியும், ஞானமும் அதிகரிக்கும். அதேபோன்று MTA நிகழ்ச்சிகளை கண்டு வருவதன் பக்கமும் கவனம் இருக்க வேண்டும். இது குறித்து நான் முன்பும் கூறியுள்ளேன்.

ஊடரங்கிற்குப் பிறகு, ரமலானுக்குப் பிறகு இந்த நன்மைகளை நம்மில் ஒருவரும் மறந்து விடக்கூடாது. மாறாக, அதை தொடர வேண்டும். ஓர் அஹ்மதி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடைய பைஅத்தில் வந்து தமக்குள் தூய மாற்றம் உண்டாக்க உறுதிமொழி எடுக்கிறார். அவர் ஒருபோதும் தாம் செய்த உறுதிமொழியை மறந்து விடக்கூடாது.

அல்லாஹ் ஒரு சாராரைக் குறித்து கூறுகிறான்: கஷ்டத்தில் இருக்கும்போது அல்லாஹ்வின் பக்கம் அவர்கள் குனிகிறார்கள். அவனது பாதுகாப்பில் வர முயற்சி செய்கின்றனர். அவனது உதவியை நாடுகின்றனர். அவனை அழைக்கின்றனர். ஆனால் துன்பம் விலகி விடும்போது இறைவனை மறந்து விடுகின்றனர்.

நம்பிக்கை கொண்டவர்கள் ஒருபோதும் இவ்வாறான மக்களுடன் இணைந்து விடக்கூடாது.

கொரோனா வைரஸ் நோய் இயற்கை பேரழிவா? அல்லது இறை தண்டனையா? என்று தற்போது மக்கள் தேடிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான அழிவுகளும், நோய்களும் வரும்போது ஒரு நம்பிக்கை கொண்டவரின் வேலை என்னவென்றால், முன்பை விட அதிகமாக இறைவன் முன் குனிய வேண்டும். இது என்ன? என்று அதை மட்டுமே தேடிக் கொண்டிருக்கக் கூடாது.

இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலமாகும். இதில் அல்லாஹ்வுடைய எண்ணற்ற வாக்குறுதிகள் அன்னாருடன் உள்ளன. அவை நிறைவேறி வருகின்றன. இனி வரக்கூடிய காலத்திலும் நிறைவேறும். எச்சரிக்கக்கூடிய அம்சம் ஏதேனும் இருந்தால் ஒரு நம்பிக்கை கொண்டவர் செய்ய வேண்டிய முதல் வேலை என்னவென்றால், நடுங்கி அச்சம் கொண்டு தமது ஈமானையும் நம்பிக்கையையும் உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். தம் நல்ல முடிவுக்காக துஆ செய்ய வேண்டும். நல்ல முடிவு ஏற்பட வேண்டும் என்பதே அசல் விஷயமாகும்.

இக்காலத்தில் வரக்கூடிய பேரிடர்கள், புயல்கள், ஆபத்துகளுக்கும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திற்கும் குறிப்பான தொடர்பு உண்டு என்று நான் பலமுறை கூறியுள்ளேன். ஆகவே நாம் நமது நம்பிக்கைக்கும், உறுதிக்கும், நல்ல முடிவுக்கும் மிக அதிகமாக துஆ செய்து வர வேண்டும். மேலும் உலகை காப்பாற்றுவதற்காகவும் மிக அதிகமாக துஆ செய்ய வேண்டும். பிளேக் நோயை அடையாளமாக வெளிப்படும் என்று தெளிவாக அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு செய்தி அறிவித்திருந்தான். அப்போதும் அன்னார் நிம்மதியிழந்து உலகிற்காக துஆ செய்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

உங்கள் செல்வங்களும் உங்கள் சந்ததிகளும் சோதனையேயாகும். அல்லாஹ் அவனிடமே மாபெரும் கூலியுண்டு. (8:29)

Faizal Hameed Ilahi, Tittacherry

கொண்டிருந்தார்கள். அடைக்கப்பட்டிருந்த கதவிற்குப் பின்னாலிருந்து அன்னாரின் துஆக்களின் நிலையைக் கேட்டவர்கள் கூறுகின்றார்கள். எந்தளவு கடுமையான மன்றாடுதலுடன் உரத்த கேட்டது என்றால் மனித குலத்தை அல்லாஹ் காப்பதற்காக அடுப்பில் வைக்கப்பட்ட பாத்திரத்திலிருந்து நீர் கொதிப்பது போன்ற சம்தம் வெளிப்பட்டது.

(ஹுதா தஆலா துன்யா கி ஹிதாயத் கேலியே ஹமேஷா நபி மப்வூஸ் கர்தா ஹே, அன்வாருல் உலூம், தொகுதி 18 பக்கம் 514)

அல்லாஹ் பிளேக் நோயை அடையாளமாக கூறிய பிறகும் மனித குலத்திற்காக அன்னாருடைய கருணையும், பரிவும் மிகைத்திருந்தது. அந்த நோயின் அழிவிலிருந்து மக்கள் தப்பிப்பதற்காகவும், அதன் தொற்றிலிருந்து தப்பிப்பதற்காகவும் அன்னார் துஆ செய்து வந்தார்கள். மிகவும் வேதனையுடன் துஆ செய்து வந்தார்கள். ஆகவே நாமும் அன்னாருடைய இந்த முன்மாதிரியை பார்க்க வேண்டும்.

இயற்கை ஆபத்துகளா? அல்லது இறை தண்டனையா? என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் ஒரு கட்டுரையை வைரஸின் தொற்று நோயுடன் சிலர் தற்போது இணைக்க முயற்சி செய்கின்றனர். மேலும் தனது கருத்தையும் கூறுகிறார்கள். இதுபற்றி நான் தெளிவுபடுத்த விரும்புவது என்னவென்றால், நான் இதற்கு முன்பும் கூறியுள்ளேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்திற்குப் பிறகு பேராபத்துகளும், பேரிடர்களும் அதிகரித்துள்ளன. இது குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தெளிவாக கூறிவிட்டார்கள். அதாவது, இவை வெளிப்படும். பேரழிவுகள் வரும். இதில் எந்த சந்தேகமும் இல்லை.

நான் கடந்த குத்பாக்களில் கூறியதுபோன்று, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதையும் கூறியுள்ளார்கள். நம்பிக்கை கொண்டவர்களில் சிலரும் இயற்கை சட்டத்திற்கேற்ப அதன் பிடியில் சிக்கி விடுகிறார்கள். ஆனால் அவர்களின் அந்தஸ்து ஷஹீதாகும். அவர்களின் முடிவு நல்ல முடிவாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்பவும் அவர்களின் முடிவு அவர்களை சுவர்க்கத்திற்கு கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 949)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த ஜனாஸாவில் மக்கள் அவரைக் குறித்து புகழ்கிறார்களோ, அவருடைய தொண்டுகளை நினைவு கொள்கிறார்களோ, அவர் நிறைவேற்றிய இறை உரிமை குறித்தும், அடியார்களின் உரிமை குறித்தும் சாட்சி பகர்கின்றார்களோ அவருக்கு சுவர்க்கம் கடமையாகி விடுகிறது.

சில தூய அஹ்மதிகளைக் குறித்து ஒவ்வொருவரும் இவ்வாறு தமது நற்தாக்கத்தை வெளிப்படுத்துவதை நாம் கண்டோம். இந்த தொற்று நோயின் தாக்கம் இந்த உலகவாதிகளின் மீது எவ்வாறு உள்ளது என்று பொதுவாக பார்க்கும்போது, அவர்களின் உணர்வு நிலையை மறக்கடிக்கச் செய்து விட்டது என்றே கூறலாம். இன்று உலகில் அவர்களின் நிலை எவ்வாறு மாறிவிட்டது என்று நாம் பார்க்கிறோம். மக்களுடைய நிலை மட்டும் இவ்வாறு இல்லை. மாறாக, தம்மை பெரும் பெரும் மலைகளைப் போன்று உறுதி வாய்ந்ததாக கருதிய பெரும் பெரும் அரசுகளின் பொருளாதாரமும், அமைப்பும் தலைகீழாகி விட்டன. இதன் விளைவுகளிலிருந்து பொதுமக்களின் கவனத்தை திசைதிருப்ப அவர்கள் செய்யும் முயற்சிகளால் நிலைமை இன்னும் அபாயகரமானதாக மாறிக் கொண்டு செல்கிறது.

அது அவர்களை போரிலும், இன்னும் அதிகமான பொருளாதார வீழ்ச்சியிலும் தள்ளி விட்டு விடும். குழப்பங்களின் நிலை மாறக்கூடிய வகையில் இவர்கள் தமக்குள் மாற்றத்தை கொண்டு வராத வரை ஒரு அழிவிலிருந்து இன்னொரு அழிவில் இவர்கள் வீழ்ந்து கொண்டே செல்வார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் இதைத்தான் கூறியுள்ளார்கள். மார்க்க விஷயத்தில் தவறிழைக்கும்போது அதன் பிடி கியாமத்தின்போது இருக்கும். அல்லாஹ் அப்போது அதைப் பார்த்துக் கொள்வான். ஆனால் குழப்பம் செய்தல், பிறர் உரிமைகளை பறித்தல், இறை அடியார்களை ஏளனம் செய்தல் போன்றவை நிம்மதியிழக்கச் செய்யும் அழிவுகளைக் கொண்டு வரும்.

(கிஷ்தி நூஹ், ரூஹானீ கஸாயின் தொகுதி 19 பக்கம் 5)

எவ்வாறிருப்பினும் நமது வேலை துஆ செய்வதாகும். உலகுக்கு புரிய வைத்தலாகும். மேலும் நமது நிலைகளை தூய்மையாக்குவதாகும். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் எந்த கட்டுரை குறித்து நான் கூறினேனோ அது நீளமான கட்டுரையாகும். ஆனால் ஒவ்வொரு அஹ்மதியும் இந்த கட்டுரையை படிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், முந்தைய சமுதாயங்களுடன் என்ன நடந்தது என்றோ, அல்லது இப்போது என்ன நடந்து விட்டது என்றோ அல்லது என்ன நடக்கிறது என்றோ அல்லது என்ன அழிவு ஏற்பட்டது? என்ன அழிவு ஏற்படவில்லை என்றோ அல்ல.

நிச்சயமாக இவ்விஷயங்களும் அச்சத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்தான். தமது நிலைமைகளின் பக்கம் கவனத்தை திசை திருப்பக்கூடிய விஷயங்கள்தான். ஆனால் அசல் விஷயம் என்னவென்றால், கவனிக்க வேண்டிய வாக்கியம் என்னவென்றால், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் எழுதியது என்னவென்றால், அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இதில் எச்சரிக்கையும், நற்செய்தியும் உள்ளது.

எச்சரிக்கை என்னவென்றால், அஹ்மதி என்ற தலைப்பு காப்பாற்ற போதுமானதாக இருக்காது. மாறாக இறையச்சத்தின் நிபந்தனையும் இதனுடன் உள்ளது. மேலும் நற்செய்தியின் அம்சம் என்னவென்றால், ஜமாஅத்தில் தோன்றும் செயல் பலவீனங்களை அஹ்மதிகள் வெகு விரைவில் சீர் செய்ய முயற்சி செய்வார்கள் என்பதாகும். இத்துடன் உள்ள விஷயம் என்னவென்றால், பைஅத்தின் பெயரை மட்டும் அதன் Label ஐ மட்டும் தம்முடன் வைத்துள்ளவர்கள் அன்னாரின் தூய போதனைகளின் பக்கம் திரும்பினால் மட்டுமே

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சினால் அவன் உங்களுக்கு ஒரு தனித்தன்மையை ஏற்படுத்துவான். மேலும் உங்கள் பலவீனங்களை உங்களை விட்டு அகற்றி விடுவான். மேலும் உங்களை மன்னிப்பான். மேலும் அல்லாஹ் பெரும் அருளுடையவனாவான். (8:30)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

தப்பிக்க முடியும். இறைவன் பக்கம் திரும்புவதே அவர்களுக்கு நற்செய்தியாகும். இல்லையென்றால் எவ்வித நற்செய்தியும் கிடையாது.

(ஹவாதிஸ் தப்இ யா அஸாபே இலாஹி பக்கம் 121)

நான் கூறியதுபோன்று, இந்நாட்களில் குறிப்பான கவனம் ஏற்பட்டுள்ளது. அதை நிலைபெறச் செய்யுங்கள். நீங்களும் சரி; உங்களுடைய குழந்தைகளுக்கும் இறைவனுக்குரிய உரிமைகள், அடியார்களுக்குரிய உரிமைகள் பக்கம் கவனமூட்டுங்கள். ஏனெனில் உலக அழிவிற்குப் பிறகு இறைவனின் பக்கம் உலக கவனம் திரும்பும்போது, உரிமைகளின் பக்கம் பார்வை திரும்பும்போது, மக்கள் ஜமாஅத்தை நோக்கித்தான் பார்ப்பார்கள். அஹ்மதிகள்தான் உலகிற்கு சரியான முறையில் வழிகாட்ட முடியும்.

ஆனால் அதற்கு முன்பு ஒளியின் பக்கம், அமைதியின் பக்கம் வரக்கூடிய வழிகள் மூடிவிடும் அளவுக்கு உலகம் மிக முன்னால் சென்று விடாமல் இருப்பதற்காகவும், அதற்கு முன்பே மக்களின் பார்வை இதன் பக்கம் திரும்பி விட வேண்டும் என்றும் அந்த நிலையே வர வேண்டாம் என்றும் வேதனையுடன் நாம் இந்த துஆவை செய்து வர வேண்டும்.

ஆகவே துஆக்களுடன் நமது முன்மாதிரியையும் நாம் காட்ட வேண்டிய தேவை உள்ளது. பிறருடைய உரிமைகளைக் கொடுப்பதன் மூலம்தான் நீங்கள் இறைவனுடைய கருணையை பெற முடியும் என்று உலகிற்கு கூற வேண்டிய தேவை உள்ளது. ஏக இறைவனின் கருணையை பெறாத வரை உலகில் அமைதியை நிலைநாட்ட நாம் செய்யும் முயற்சிகள் பெற்றி பெற முடியாது. மரணத்திற்குப் பிறகு நல்ல முடிவும் ஏற்படாது.

அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிகள் இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்ற அதே வேளையில் படைப்பினங்களுக்கு தொண்டும் செய்து வருகின்றனர். இளைஞர்களும், ஆரோக்கியமான அன்சாரும், பெண்களும் தொண்டு செய்கின்றனர். இது குறித்து எல்லா இடத்திலிருந்தும் மிக நல்ல அறிக்கைகள் வருகின்றன. இந்த படைப்பினத் தொண்டு வழிதவறிய சில உலகவாதிகளுக்கு வழிகாட்டக் கூடியதாக அமைகின்றன.

கடந்த நாட்களில் கனடாவிலிருந்து ஒரு அறிக்கை வந்தது. ஒரு பெண்மணி நாலா புறமும் நிராசையடைந்து இரவு இரண்டு மணிக்கு குத்தாமுல் அஹ்மதிய்யாவின் ஹெல்ப் லைனுக்கு ஃபோன் செய்து எனது திக்கற்ற நிலை என்னவென்றால், எனது மகன் நோய்வாய்ப்பட்டிருக்கின்றான். மருந்து வாங்கக்கூடிய அனைத்து வழிகளும் மூடியுள்ளன. எல்லா இடத்திலிருந்தும் மறுக்கப்பட்டு விட்டது என்று கூறியுள்ளார்கள்.

அந்த பெண்மணி மேலும் கூறியது என்னவென்றால், விடிவதற்கு முன்பு மருந்து கிடைக்காது என்று எல்லாரும் கூறுகிறார்கள். ஆனால் எனது மகனின் நிலையோ மிக மோசமாக உள்ளது. இறைவன் இருப்பதாக மக்கள் கூறுகிறார்கள். ஆனால் நான் இறைவனை நம்புவதில்லை. இன்று சோதித்துப் பார்த்து விடலாம் என்று நான் கருதினேன். நான் மிக வேதனையுடனும், மன உருக்கத்துடனும். இறைவா! நீ இருக்கிறாய் என்றால் மிக மோசமான நிலையில் இருக்கும் என் மகனுக்கு மருந்திற்கான ஏற்பாட்டைச் செய் என்று கூறினேன்.

அத்துடன் குத்தாமின் ஹெல்ப் லைனும் என் நினைவுக்கு வந்தது. ஃபோன் செய்தபோது யாரோ ஒருவர் ஃபோனை எடுத்து பேசினார். அவரிடத்தில் எனது தேவையை கூறினேன். அவர் முயற்சி செய்வதாக கூறினார். சிறிது நேரத்திற்குப் பிறகு அவருடைய ஃபோன் வந்தது. இப்போது இரவு இரண்டு மணியாகிறது. ஏற்பாடு செய்வது கடினம் என்று கூறினார். உங்களின் மகனின் நிலை எவ்வாறு உள்ளது என்று கேட்டார்.

நான் மீண்டும் அனைத்து நிலையையும் கூறினேன். எனது நிம்மதியிழந்த நிலையை வெளிப்படுத்தினேன். அப்போது அவர் நானே சென்று பார்க்கிறேன் என்று கூறினார். ஓரிடத்தில் ஃபார்மஸி ஒன்று திறந்திருக்கும். அது திறந்திருந்தால் மருந்து வாங்கி வருகிறேன் என்று கூறினார். நான் அவரை அழைக்கும்போது அவர் உறக்கத்தில் இருந்தார். அவர் இரவு நேரத்தில் எழுந்து சென்றார். அவர் 50 கிலோ மீட்டர் தூரம் பயணித்து சென்றார். மேலும் எனக்கு மருந்து வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தார்.

இந்த விஷயத்திலிருந்து இறைவன் இருக்கிறான் என்ற நம்பிக்கை எனக்கு வந்து விட்டது. மேலும் இந்த நம்பிக்கை அஹ்மதி காதிமின் மூலமாக எனக்கு கிடைத்தது. நான் இதற்காக அவருக்கு கடமைப்பட்டுள்ளேன் என்று கூறியுள்ளார்கள்.

இந்நாட்களில் படைப்பின தொண்டு செய்து அடியார்களை இறைவனுக்கு அருகில் கொண்டு வரவும் காரணியாக நாம் ஆகலாம். இதற்காக நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். அழிவு வருகிறதா? இல்லையா? என பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. பிறருடைய வேதனைகளை உணரக்கூடிய படிப்பினை ரமலானில் நமக்கு கிடைத்துள்ளது. அதையும் எப்போதும் தொடரச் செய்ய வேண்டும். எப்போதும் பிறருடைய துன்பத்தை உணருங்கள். ஏனென்றால் பிறருடைய துன்பத்தை உணருவதும் ரமலானின் நோக்கங்களுள் ஒரு நோக்கமாகும்.

ஒருபுறம் இந்த தொற்று நோயின் காரணமாக உலகின் சூழ்நிலை மாறியுள்ளது. மறுபுறம் ரமலானின் சூழ்நிலை எப்போதும் நமக்கு நமது பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டக்கூடியதாக இருக்க வேண்டும். நாளையோ மறுநாளோ ரமலான் முடிந்து விடும். ஆனால் அதன் நன்மைகளை நாம் எப்போதும் நமக்குள் வைத்திருக்க வேண்டும். நாம் மேற்கொண்ட தூய மாறுதல்களை எப்போதும் நமக்குள் வைத்திருக்க வேண்டும். ஊரடங்கு தளர்த்தப்படும்போது நாம் நம்மீது உள்ள பொறுப்புகளையும், மனித குலத்தின் மீதுள்ள பொறுப்புகளையும் மறந்து விடக்கூடாது.

எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகள், அடியார்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகளைப் பற்றி நாம் கவனம் செலுத்தும்போது அதே நேரத்தில் மற்றவர்களுக்கும் இதன் பக்கம் கவனமூட்டி வர வேண்டும். மேலும் நமது தூய முன்மாதிரியால் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளையும், அடியார்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகளையும் உலகம் செலுத்தக் கூடியதாக மாற்ற முயற்சி செய்ய வேண்டும்.

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எப்போதும் கட்டுப்பட்டு நடவுங்கள். ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள். (அவ்வாறு கொள்வீர்களாயின்) நீங்கள் தடுமாற்றமடைந்து (உங்கள்) வலிமை (உங்களை விட்டு) அகன்று விடும். மேலும் பொறுமையினை மேற்கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான். (8:47)

A.Nasir Ahmad (அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்)

நாம் இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளின் ஒளியில் நமது அந்தஸ்தின் பக்கமும், நிலையின் பக்கமும் கவனமூட்ட முயற்சி செய்யாத ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் எந்தவொரு சபையும் இருந்ததில்லை.

ஆகவே உண்மையான நம்பிக்கையும், உறுதியும் நமக்கு கிடைப்பதற்காக எப்போதும் நாம் அன்னாருடைய அறிவுரைகளை நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும். பிறருடைய பலவீனங்களின் பக்கம் பார்வையை கொண்டு செல்லாமல் தமது நிலைகளை ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டும்.

இது தொடர்பாக நான் இப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில வழிகாட்டல்களை உங்கள் முன் எடுத்து வைப்பேன். அவ்வழிகாட்டல்களைக் குறித்து நாம் எப்போதும் சிந்தித்து வர வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த அந்தஸ்தில், என்ன தரத்தில் நம்மைக் காண விரும்பினார்கள் என்றால் ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:

ஒவ்வொருவரும் தஹஜ்ஜுதிற்கு எழ முயற்சி செய்ய வேண்டும் ஐவேளை தொழுகைகளிலும் பணிவை மேற்கொள்ளுங்கள். இறைவனை கோபம் கொள்ளச் செய்யும் ஒவ்வொரு விஷயங்களிலிருந்தும் தவ்பா செய்யுங்கள். தவ்பா என்பது என்னவென்றால், எல்லாவித தீமைகளையும், இறைவனுடைய விருப்பத்திற்கு மாறான அனைத்து விஷயங்களையும் விட்டு விட்டு ஒரு உண்மையான மாற்றத்தை கொண்டு வாருங்கள். மேலும் முன்னேறி செல்லுங்கள். இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். இதிலும் இறைவனது கருணை உள்ளது. மனித பழக்கத்தை ஒழுங்குபடுத்துங்கள். கோபம் கொள்ளாதீர்கள். பணிவும் தன்னடக்கமும் அவ்விடத்தை பிடித்துக் கொள்ளட்டும். ஒழுக்கத்தை சீர் செய்வதுடன் தனது ஆற்றலுக்கேற்ப சதகாக்களை கொடுப்பதையும் மேற்கொள்ளுங்கள்.

وَيُطْعِمُونَ الطَّعَامَ عَلَىٰ حُبِّهِ مِسْكِينًا وَيَتِيمًا وَأَسِيرًا ۝

அதாவது இறை விருப்பத்திற்காக ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், கைதிகளுக்கும் உணவு வழங்குகின்றனர். குறிப்பாக இறை விருப்பத்திற்காக நாங்கள் கொடுத்துள்ளோம். மேலும் கடும் அச்சுறுத்தும் அந்த நாளுக்கு நாங்கள் அஞ்சுகிறோம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

சுருக்கம் என்னவென்றால், இறைவன் தனது அருளுடனும் கருணையுடனும் உங்களுடன் நடந்து கொள்வதற்காக நீங்கள் துஆவுடனும், பாவமன்னிப்புடனும் செயல்படுங்கள். சதாகக்களை கொடுத்து வாருங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 208 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஜமாஅத்திற்கு அறிவுரை கூறியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்கட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் நல்லடியார்களைத் தவிர எவரையும் பொருட்படுத்துவதில்லை. உங்களுக்குள் சகோதரத்துவத்தையும், நேசத்தையும் உருவாக்குங்கள். மிருகத்தனத்தையும், வேறுபாடுகளையும் விட்டு விடுங்கள். எல்லா விதமான ஏளனத்தையும் விட்டு முற்றிலும் ஒதுங்கி விடுங்கள். ஏனென்றால் ஏளனம் மனிதனை உண்மையிலிருந்து விலக்கி எங்கோ கொண்டு சென்று விடுகிறது. ஒருவர் மற்றவருடன் கண்ணியத்தோடு நடந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் தனது நிம்மதியை விட தனது சகோதரரின் நிம்மதிக்கு முன்னுரிமை வழங்குங்கள்.

அல்லாஹ்வுடன் ஒரு உண்மையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவனுக்கு கீழ்ப்படிந்து திரும்பி வாருங்கள். அல்லாஹ்வின் கோபம் பூமியின் மீது இறங்கிக் கொண்டிருக்கிறது. எவர்கள் முழுமையான முறையில் தனது அனைத்து பாவங்களிலிருந்தும் தவ்பா செய்து அவனிடத்தில் வருகிறார்களோ அவர்களே அதிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள்.

நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் கூற்றுக்கு நீங்கள் கீழ்ப்படிந்து அவனது மார்க்கத்திற்கு ஆதரவாக நீங்கள் முயற்சி செய்தால் இறைவன் அனைத்து தடைகளையும் நீக்கி விடுவான். மேலும் நீங்கள் வெற்றி பெற்று விடுவீர்கள். நல்ல பயிர்களுக்காக விளை நிலத்திலிருந்து களைகளை விவசாயி பிடுங்கி எறிந்து விளை நிலத்தை செழிப்பான, கனிகளைத் தரும் மரங்களைக் கொண்டு அழகுபடுத்துவதை நீங்கள் பார்த்ததில்லையா? மேலும் அதனை அவர் பாதுாக்கிறார்.

ஒவ்வொரு தீமை தரும், நஷ்டமிழைக்கும் விஷயத்திலிருந்தும் அவைகளை பாதுகாக்கிறார். ஆனால் எந்த மரங்கள், எந்த பயிர்கள் கனிகளைத் தருவதில்லையோ மேலும் அவை பட்டுப்போய் காய்ந்து விடுகின்றதோ அவைகளை ஏதேனும் கால்நடை வந்து உண்ணுவதையோ அல்லது ஏதேனும் மரவெட்டி அதை வெட்டி அடுப்பில் இடுவதையோ பற்றி அதன் எஜமானர் பொருட்படுத்துவதில்லை.

ஆகவே இவ்வாறே நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் இறைவனுக்கு முன்னால் உண்மையாளராக இருப்பீர்கள் என்றால் எவருடைய பகைமையும் உங்களுக்கு எந்த துன்பத்தையும் தர முடியாது. ஆனால் நீங்கள் உங்களுடைய நிலைகளை சீர் செய்யாத வரை அல்லாஹ்வுடன் கட்டுப்படுதலின் ஒரு உண்மையான உறுதிமொழியை நீங்கள் செய்யாத வரை அல்லாஹ் எவரையும் பொருட்படுத்துவதில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்கட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நீங்கள் இறைவனுடைய அன்பர்களுடன் இணைந்து விடுங்கள். ஒவ்வொருவரும் தங்களிடையே இருக்கின்ற மோதல்களையும், மன உணர்ச்சிகளையும், பகைமைகளையும் இடையிலிருந்து அகற்றி விடுங்கள். இது அற்பமான விஷயங்களிலிருந்து நீங்கள் விலகி, முக்கிய மற்றும் மிகப்பெரும் பணிகளில் நீங்கள் மூழ்கிவிடும் தருணமாகும். மக்கள் உம்மை எதிர்ப்பார்கள்.

அன்னார் கூறினார்கள்: எவரையும் நீங்கள் பொருட்படுத்தாதீர்கள்... இந்த விஷயத்தை நீங்கள் இறுதி விருப்பமாக நினைத்துக் கொள்ளுங்கள். அதாவது, ஒருபோதும் கடுமையாக செயல்படாதீர்கள். உங்களை எதிர்ப்பார்கள். ஆனால் நீங்கள் ஒருபோதும் கடுமையை மேற்கொள்ள வேண்டாம். மாறாக,

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் சமாதானத்திற்கு இணங்கினால் (தூதரே) நீரும் சமாதானத்திற்கு இணங்குவீராக. அல்லாஹ்விடமே நீர் நம்பிக்கை வைப்பீராக. நிச்சயமாக அவன் (பிரார்த்தனைகளை) மிகக் கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான். (8:62)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

மென்மையாகவும், தன்மையாகவும், நற்பண்புகளுடனும் அவர்களுக்கு புரிய வையுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 266–268 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

நம்முடைய ஒழுக்க நிலைகளை சீர் செய்தல் மற்றும் அடியார்களின் உரிமைகள் தொடர்பாக கவனமூட்டியவாறு ஓரிடத்தில் அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஒரு ஹதீஸில் வருகிறது. கியாமத்தின்போது அல்லாஹ் தனது சில அடியார்களிடம் கூறுவான். நீங்கங் தூய மக்களாவீர்கள். நான் உங்கள் மீது மிக்க மகிழ்ச்சியாக உள்ளேன். ஏனென்றால் நான் அதிக பசியோடிருந்தேன். நீங்கள் எனக்கு உணவு தந்தீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன். நீங்கள் எனக்கு ஆடையை தந்தீர்கள். நான் தாகித்திருந்தேன். நீங்கள் எனக்கு தண்ணீர் தந்தீர்கள். நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். நீங்கள் என்னை நலம் விசாரித்தீர்கள்.

அப்போது அம்மக்கள் கூறுவார்கள். அல்லாஹ்வே! நீ இவ்வாறான விஷயங்களிலிருந்து தூயவனாவாய். நாங்கள் உன்னுடன் நடந்து கொள்ளும் வகையில் எப்போது இவ்வாறு நடந்தது என்று கேட்பார்கள். அதற்கு அல்லாஹ் கூறுவான். என்னுடைய இன்ன இன்ன அடியார்கள் அவ்வாறு இருந்தார்கள். நீங்கள் அவர்களை கவனித்துக் கொண்டீர்கள். அது எவ்வாறான விஷயம் என்றால் நீங்கள் என்னுடன் நடந்து கொண்டது போன்றதாகும்.

பிறகு இன்னொரு கூட்டம் கொண்டு வரப்படும். நீங்கள் என்னுடன் மிக மோசமாக நடந்து கொண்டீர்கள் என்று அல்லாஹ் கூறுவான். நான் பசியோடிருந்தேன். நீங்கள் எனக்கு உணவு தரவில்லை. நான் தாகித்திருந்தேன். நீங்கள் எனக்கு தண்ணீர் தரவில்லை. நான் ஆடையின்றி இருந்தேன். நீங்கள் எனக்கு ஆடை தரவில்லை. நான் நோய்வாய்ப்பட்டிருந்தேன். நீங்கள் என்னை நலம் விசாரிக்கவில்லை என்று கூறுவான்.

அப்போது அம்மக்கள் கூறுவார்கள். அல்லாஹ்வே! நீ இவ்வாறான விஷயங்களிலிருந்து தூயவனாவாய். நாங்கள் உன்னுடன் நடந்து கொள்ளும் வகையில் எப்போது இவ்வாறு நடந்தது என்று கேட்பார்கள். அதற்கு அல்லாஹ் கூறுவான். என்னுடைய இன்ன இன்ன அடியார்கள் அந்நிலையில் இருந்தார்கள். நீங்கள் அவர்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளவில்லை. அது எவ்வாறான விஷயம் என்றால், நீங்கள் என்னுடன் நடந்து கொண்டது போன்றதாகும்.

சுருக்கமாக, மனித குலத்துடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும். அது முஸ்லிமாகவோ, இந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ அல்லது வேறு யாராக இருந்தாலும் சரியே.

அன்னார் கூறினார்கள்: மனித குலத்துடன் பரிவுடனும், அனுதாபத்துடனும் நடந்து கொள்வது மிகப்பெரும் இபாதத் ஆகும். மேலும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு இது மிகச்சிறந்த வழிமுறையாகும். ஆனால் இந்த விஷயத்தில் மிகவும் பலவீனம் காட்டப்படுவதை நான் பார்க்கிறேன்.

மற்றவர்களை ஏளனமாக கருதுகிறார்கள். அவர்களைக் குறித்து கேலி செய்யப்படுகிறது. அவர்களைக் கவனித்துக் கொள்ளுதல், ஏதேனும் துயரத்தில் கஷ்டத்தில் அவர்களுக்கு உதவி செய்வது ஒருபுறமிருக்கட்டும். ஏழைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளாமல் அவர்களை ஏளனமாக கருதுபவர்களைக் குறித்து, அவர்களே இந்த துன்பத்திற்கு ஆளாகிவிடும் நிலை வந்து விடுமோ என்று நான் அஞ்சுகிறேன்.

அல்லாஹ் எவர்களுக்கு அருள் செய்துள்ளானோ அவர்கள் நன்றி செலுத்தக்கூடிய முறை என்னவென்றால், அவனுடைய படைப்பினங்களுடன் கருணையுடனும், நல்ல முறையிலும் நடந்து கொள்ள வேண்டும். இறைவனது இந்த அருளைக் கண்டு கர்வம் கொள்ளக்கூடாது. மிருகங்களைப் போன்று ஏழைகளை நசுக்கி விட வேண்டாம்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 102,103 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

இதற்கு மேலும் விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அசல் விஷயம் என்னவென்றால், மிகவும் கஷ்டமான, நுட்பமான விஷயம் அடியார்களுக்கு கொடுக்க வேண்டிய உரிமைகளேயாகும். ஏனென்றால் ஒவ்வொரு நேரமும் அதை எதிர்கொள்ள வேண்டியது வருகிறது. ஒவ்வொரு நொடிப்பொழுதும் இந்த சோதனை முன்னால் உள்ளது. ஆகவே இந்த விஷயத்தில் மிக முன்னெச்சரிக்கையுடன் காலை எடுத்து வைக்க வேண்டும். என்னுடைய மார்க்கம் என்னவென்றால், எதிரியுடன் கூட வரம்பு மீறி கடுமை காட்டி விடக்கூடாது என்பதாகும்.

சிலர் என்ன விரும்புகிறார்கள் என்றால், எந்த அளவு முடியுமோ அந்த அளவு எதிரிகளின் அழிவு, நாசத்திற்காக முயற்சி மேற்கொள்ள வேண்டும் என கருதுகிறார்கள். பிறகு அவர்கள் இந்த சிந்தனையில் மூழ்கி தகுந்த, தகாத விஷயங்களை பொருட்படுத்தாமல் விட்டு விடுகிறார்கள். அவருக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கில் பொய்யான குற்றச்சாட்டுகளை அவர் மீது சுமத்துகின்றனர். அவரைப்பற்றி புறம் பேசுகின்றனர். அவருக்கு எதிராக மற்றவர்களை தூண்டுகின்றனர்.

இப்போது கூறுங்கள். சாதாரண பகைமையின் காரணமாக எந்த அளவு தீமைகளுக்கும் பாவங்களுக்கும் வாரிசாகி விட்டார். மேலும் இந்த தீமைகள் தமது குழந்தைகளைக் பெற்றெடுக்கும்போது நிலை எங்கு வரை சென்றடைந்து விடும் என்பதை பாருங்கள்.

நான் உண்மையாகவே கூறுகிறேன். தற்போது உலகின் நிலை இவ்வாறு மாறி வருவதை நான் பார்க்கிறோம். தனிப்பட்ட ரீதியிலும், ஒட்டுமொத்த ரீரியிலும், சமுதாய ரீதியிலும், அரசாங்க ரீதியிலும் இது காணப்படுகிறது.....

நான் உண்மையாகவே கூறுகிறேன். நீங்கள் எவரையும் உங்களுடைய தனிப்பட்ட எதிரியாக கருதாதீர்கள். மேலும் தீராத பகை கொள்ளும் பழக்கத்தை முற்றிலும் விட்டு விடுங்கள். இறைவன் உங்களுடன் இருந்தால், நீங்கள் இறைவனுக்காக ஆகிவிட்டால் அவன் எதிரிகளையும் உங்கள் தொண்டர்களாக ஆக்கி விடுவான்.

ஆனால் நீங்களோ இறைவனுடனேயே தொடர்பை துண்டித்துள்ளீர்கள். அவனுடனேயே எவ்வித உறவும், நட்பும் எஞ்சியிருக்கவில்லை. அவனது விருப்பத்திற்கு மாற்றமாக உங்களது நடவடிக்கைகள் உள்ளன. பிறகு இறைவனை விட உங்களுக்கு மிகப்பெரும் எதிரி யாராவது இருப்பார்களா? படைப்பினங்களுடனான பகைமையில் மனிதன் தப்பித்துக் கொள்ள இயலும். ஆனால் இறைவன் எதிரியாக இருப்பான் என்றால் பிறகு அனைத்து படைப்பினங்களும் நண்பனாக இருந்தாலும் ஒன்றும் ஆக முடியாது.

எனவே உங்களது வழிமுறை நபிமார்களின் வழிமுறையைப் போன்றதாக இருக்க வேண்டும். இறைவனுடைய விருப்பம் என்னவென்றால், தனிப்பட்ட பகை ஒன்றும் இருக்கக்கூடாது. நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மனிதன் தனிப்பட்ட

முறையில் எவருக்கும் எதிரியாக இல்லாதிருக்கும்போதுதான் அவனுக்கு கண்ணியமும் நற்பேறும் கிடைக்கிறது. ஆனால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கண்ணியம் தொடர்பான விஷயம் வேறு. அதாவது எவர் இறைவன் மற்றும் அவனது தூதரை கண்ணியப்படுத்தாமல் அவர்களுக்கெதிராக எதிரியாக இருப்பாரோ அவரை நீங்கள் உங்கள் எதிரியாக நினைத்துக் கொள்ளங்கள்.

அந்த பகைமையை புரிவதற்கும் அன்னார் விளக்கமளித்துள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அவரை பகைவராக நினைக்க வேண்டும் என்பதன் பொருள் அவர்மீது நீங்கள் பழிசுமத்த வேண்டும் என்பதல்ல. தேவையின்றி அவருக்கு துன்பம் தர நீங்கள் திட்டம் தீட்ட வேண்டும் என்பதல்ல. மாறாக, அவரை விட்டு நீங்கள் விலகி விட வேண்டும். இறைவனிடத்தில் அவரை ஒப்படைத்து விடுங்கள். சாத்தியமென்றால் அவரின் சீர்திருத்தத்திற்காக துஆ செய்யுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 104,105 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு நல்லொழுக்க தரத்தைப் பற்றி கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்கட மஸீஹ் (அலை) அவர்கள் அவர்கள் கூறுகின்றார்கள்:

நல்லொழுக்கத்தின் நிலை எந்த அளவு சீரடைந்து இருக்க வேண்டும் என்றால், நல்ல எண்ணத்துடன் ஒருவருக்கு புரிய வைக்க வேண்டும் என்றால் மேலும் அவருடைய தவறுகளைக் குறித்து அவருக்கு எடுத்துக்கூற வேண்டும் என்றால் அவர் அதை தவறாக கருதாத வகையில் எடுத்துக் கூற வேண்டும். எவரையும் ஏளனமாக பார்க்கக்கூடாது. எவரது உள்ளத்திற்கும் துன்பம் தராதீர்கள்.

ஜமாஅத்தில் ஒருவர் மற்றவருக்கிடையில் சண்டைகளும், குழப்பங்களும் இருக்கக்கூடாது. மார்க்க விஷயத்தில் வறியவர்களாக இருப்பவர்களையும் கண்டு ஒருபோதும் ஏளனமாக பார்க்காதீர்கள். செல்வம், பொருள் அல்லது குடும்ப மேன்மையைக் கருத்தில் கொண்டு தேவையற்ற கர்வம் கொண்டு பிறரை இழிவுபடுத்தவோ, ஏளனமாக கருதவோ செய்யாதீர்கள். எவர் இறையச்சம் கொண்டவராக இருப்பாரோ அவரே இறைவனிடத்தில் கண்ணித்திற்குரியவராவார்.

அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ أَكْرَمَكُمْ عِنْدَ اللَّهِ أَتْقَاكُمْ (49:14)

மற்றவருடனும் முழுமையான நல்லொழுக்கத்துடன் பழக வேண்டும். தீய ஒழுக்கத்தின் முன்மாதிரியும் நல்லதல்ல. நம்முடைய ஜமாஅத்துடன் வழக்கு தொடுப்பதில்தான் மக்கள் சாக்குப்போக்கை தேடுகிறார்கள். மக்களுக்கு ஒரு பிளேக் நோய் என்றால் நம்முடைய ஜமாஅத்தில் இரண்டு பிளேக் நோய் ஆகும். ஜமாஅத்தில் ஒருவர் தீமை செய்வார் என்றால் அந்த ஒருவரின் காரணமாக முழு ஜமாஅத்தின் மீதும் அவமதிப்பு வரும். அறிவு, மென்மை ஆகியவற்றை கண்டும் காணாமல் விட்டு விடக்கூடிய ஆற்றலையும் மேம்படுத்துங்கள். அறிவிலியின் அறிவற்ற கூற்றுகளுக்கு சமாதானத்துடன் பதில் அளியுங்கள். வெறுப்பான சொற்களுக்கு, வெறுப்பான சொற்களைக் கொண்டு பதிலளிக்க வேண்டாம்.........

இந்த சோதனைகளின் நாட்களில் உங்களது நஃப்ஸை அழித்து இறையச்சத்தை மேற்கொள்வது பொருத்தமானதாகும். நான் இந்த விஷயங்களை ஏன் கூறுகிறேன் என்றால் நீங்கள் அறிவுரை மற்றும் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஆகும். உலகம் அழியக்கூடியதாகும். இறுதியில் இறந்து விடக்கூடியதாகும். மகிழ்ச்சி என்பது மார்க்க விஷயத்தில் உள்ளது. அசல் நோக்கம் மார்க்கமாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 208,209)

பிறகு இன்னொரு சந்தர்ப்பத்தில் அறிவுரை கூறியவாறு அன்னார் கூறுகின்றார்கள்:

நம்முடைய ஜமாஅத் வெறும் நாவளவில் வாதிக்கக்கூடியதாக மட்டும் இல்லாமல் பைஅத்தின் நோக்கத்தை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். விவகாரங்களைக் கொண்டு அதை நீங்கள் அறிந்துள்ளதாக இறைவனை நீங்கள் மகிழ்ச்சியடையச் செய்ய முடியாது. இவற்றால் அல்லாஹ் மகிழ்ச்சியடைய மாட்டான். உள்ளுக்குள் மாற்றம் இல்லாதவரை உங்களுக்கும், மற்றவர்களுக்கும் எந்த வேறுபாடும் கிடையாது. உங்களிடத்தில் சூழ்ச்சி, ஏமாற்றுதல், சோம்பேறித்தனம் காணப்படும் என்றால் மற்றவர்களுக்கு முனபே நீங்கள் அழிக்கப்படுவீர்கள். ஒவ்வொருவரும் தமது சுமையை தாமே சுமக்க வேண்டும்.

தமது வாக்குறுதியை நிறைவேறுங்கள். வாழ்க்கையின் மீது எந்த நம்பிக்கையும் கிடையாது. எவர் முன்பே நன்மை செய்வாரோ அவர் தூய்மையாகிவிட சாத்தியமுள்ளது. உங்களுடைய நஃப்ஸின் மாற்றத்திற்காக முயற்சி செய்யுங்கள். தொழுகையில் துஆக்களை கேளுங்கள். சதகாக்களின் மூலமாகவும், தான தருமங்களின் மூலமாகவும், பிற எல்லாவித திட்டங்களின் மூலமாக வல்லதீன ஜாஹதூ ஃபீனா என்று முயற்சிப்பவர்களுடன் இணைய முயலுங்கள்.

நோயாளி மருத்துவரை சந்திக்கிறார். மருந்தை உட்கொள்கிறார். இரத்தத்தை வெளியேற்றுகிறார். ஒத்தடம் செய்து கொள்கிறார். நிவாரணம் பெற எல்லாவித திட்டங்களையும் செய்கிறார். இவ்வாறே தன்னுடைய ஆன்மீக நோயை குணப்படுத்த எல்லா விதத்திலும் முயற்சி செய்யுங்கள். நாவளவில் மட்டும் முயற்சி செய்யாமல் இறைவன் எத்துனை வகையான முயற்சிகளை கூறியுள்ளானோ அவை அனைத்தையும் செய்யுங்கள். தான தருமங்கள் கொடுங்கள். காடுகளுக்குச் சென்று துஆ செய்யுங்கள்... திட்டம் தீட்டக்கூடியவர்களை அல்லாஹ் நேசிக்கின்றான். மனிதன் எல்லாவித திட்டங்களையும் மேற்கொள்ளும்போது ஏதவாது ஒரு இலக்கையும் அடைந்து விடுகிறான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 188,189 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

அதாவது இலக்கை குறி வைத்து அடித்து விடுகிறான். ஆகவே குறிப்பாக இந்நாட்களில் பாகிஸ்தான் மற்றும் சில நாடுகளில் அஹ்மதிகளுக்கெதிராக ஒரு துன்பமிழைக்கப்படுகிறது. நாம் அல்லாஹ்வின் அருளையும், கருணையையும் ஈர்ப்பதற்கு எல்லாவித திட்டங்களையும் மேற்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். எதிரி தனது எதிர்ப்பில் உச்ச நிலையை அடைந்திருக்கும்போது நாமும் அல்லாஹ்வின் அருளையும், கருணையையும் ஈர்ப்பதற்கு முன்பைவிட அதிகமாக முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து, தகுதி மற்றும் அன்னாருடைய அழகிய முன்மாதிரியின் உண்மைத்துவத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

மஸீஹ் (அலை) அவர்கள் நம்மீது தெளிவாக்கியிருக்கின்றார்கள். அதாவது இந்த உயர் ஒழுக்கங்களும், இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளும், அடியார்களுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளும் இந்த அனைத்து விஷயங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியின்படி செயல்பட்டால்தான் நிறைவேற்ற முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழியை விட்டுவிட வேண்டாம் என்று மீண்டும் மீண்டும் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள்.

இதை குறித்து அறிவுரை வழங்கியவாறு அன்னார் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

நான் உங்களுக்கு இதையும் கூற விரும்புகிறேன். பல மக்கள் தான் உருவாக்கிய நன்மைகளின் மூலமாகவும், வழக்கத்தின் மூலமாகவும் அந்த மேன்மைகளை அடைய விரும்புகின்றனர். அல்லது இறைவனுடன் உண்மையான தொடர்பை உருவாக்க விரும்புகின்றனர். உங்களுக்கு நான் கூறுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த வழிமுறையை மேற்கொள்ளவில்லையோ அது வீணானதாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அருள் பெற்றவர்களின் வழியில் சென்ற அனுபவசாலி வேறு யாராக இருக்க முடியும். அன்னாரின் மீது நபித்துவத்தின் அனைத்து மேன்மைகளும் முடிவுற்றன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட வழிமுறை மிகச் சரியானதாகவும், நெருக்கமானதாகவும் உள்ளது. இந்த வழியை விட்டுவிட்டு பிற வழிகளை கண்டுபிடித்தல் என்பது என்னைப் பொருத்தவரை நாசத்திற்குரிய வழியாகும். அவ்வழிகள் வெளிப்படையாக எவ்வளவு இனிமையானதாக இருந்தாலும் சரியே! இறைவன் என்மீது இவ்வாறே வெளிப்படுத்தியுள்ளான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு விலக்கக் கூடியவர்களின் நிலை இவ்வாறே உள்ளதாக நாம் காண்கிறோம். பீர்மார்கள், ஃபக்கீர்மார்கள் மற்றும் பெயர் தாங்கி உலமாக்களின் தவறான விளக்கங்களின் காரணமாக இஸ்லாமிய போதனையை சீர்குலைத்து விட்டனர். அவ்வாறிருந்தும் தம்மைத்தாமே முஸ்லிம்கள் என்று கூறுகின்றனர். ஆனால் நம்மை இஸ்லாமிய வட்டத்தை விட்டு வெளியேற்றுகின்றனர்.

பிறகு முஹம்மதிய அந்தஸ்தைப் பற்றி மேலும் விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றுவதால் இறைவன் கிடைக்கிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதை விட்டுவிட்டு ஒருவர் முழு வாழ்நாள் முழுவதும் முட்டிக் கொண்டிருந்தாலும் அவர் எவ்வித குறிக்கோளையும் அடைய முடியாது.

சஅதி என்பவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதன் அவசியம் குறித்து கூறுகிறார். ஃபார்ஸி கவிதையாகும். அதாவது தூய்மை, இறையச்சம், உண்மை மற்றும் பரிசுத்தத்திற்கு கண்டிப்பாக முயற்சி செய்யுங்கள். ஆனால் முஸ்தஃபா (ஸல்) அவர்கள் கூறிய வழிமுறைகளிலிருந்து மீறிச் செல்லாதீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழியை ஒருபோதும் விட்டு விடாதீர்கள். விதவிதமான நன்மைகளின் வழிமுறைகளை மக்கள் உருவாக்கியுள்ளதை நான் காண்கிறேன். தலைகீழாக தொங்குகின்றனர். யோகிகளைப் போன்று துறவ வழிமுறையை மேற்கொள்கின்றனர். ஆனால் இவை அனைத்து பயனற்றதாகும். தலைகீழாக தொங்குவதும், எதிர்மறை விளைவுகளைக் குறிப்பிடுவதும் நபிமார்களின் நடைமுறை கிடையாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இதனால்தான் அழகிய முன்மாதிரி என்று அல்லாஹ் கூறினான்.

அதாவது உங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில்தான் அழகிய முன்மாதிரி உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடங்கள். ஒரு அங்குலம் கூட விலகிவிட முயற்சி செய்ய வேண்டாம்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 356 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

சுருக்கமாக, அல்லாஹ்வின் அருள்பெற்ற மக்களிடத்தில் இருக்கக்கூடிய மேன்மைகள் மற்றும்வல்லதீன ஜாஹதூ ஃபீனா என்பதில் எதன் பக்கம் அல்லாஹ் சுட்டிக்காட்டியுள்ளானோ அதை அடைய வேண்டியது ஒவ்வொரு மனிதனின் நோக்கமாகும். மேலும் நம்முடைய ஜமாஅத் குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் இந்த இயக்கத்தை நிலைநிறுத்தியதன் பின்னால் இருக்கக்கூடிய இறை விருப்பம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவ்வாறான ஜமாஅத்தை ஆயத்தப்படுத்தினார்களோ அவ்வாறான ஜமாஅத் ஆயத்தமாக வேண்டும் என்பதேயாகும். இதன் மூலம் இக்கடைசி காலத்தில் இந்த ஜமாஅத் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைக்கும் கண்ணியத்திற்கும் சாட்சியாக அமைய வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 256 – 1984 ஆம் ஆண்டு பதிப்பு)

ஆகவே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றக் கூடியவர்களில் இணைந்துள்ளோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப்பேரன்பரின் பைஅத்தில் வந்து அன்னார் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றக் கூடியவர்களில் இணைய வேண்டும். மேலும் அன்னார் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை நமது அனைத்து ஆற்றல்களின் மூலம் நமதாக்க முயற்சி செய்ய வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரி மற்றும் அன்னாரின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டு அருள்பெற்ற கூட்டத்தில் இணைய வேண்டும்.

அல்லாஹ்வின் கோபத்தை தூண்டக்கூடிய, வழிதவறிய கூட்டத்தின் தீய தாக்கங்களிலிருந்து எப்போதும் விலகி இருக்க வேண்டும். இவற்றில்தான் நமது வாழ்வாதாரம் உள்ளது. மேலும் தமது தொழுகையில் சிறப்பான இன்பத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளுக்கேற்ப செயல்பட்டாவறு தமது வாழ்வை எப்பொழுதும் கழிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிராகரிப்பவர்கள் ஒருவருக்கொருவர் நண்பர்களாயிருக்கின்றனர். நாம் இட்ட கட்டளையை நீங்கள் செய்யவில்லையாயின் பூமியில் பெருங்குழப்பமும் கலகமும் ஏற்பட்டு விடும். **(8:74)**

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

இறை வழியில் கைதானவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்களில் சிலரின் மீது அநீதியான முறையில் மிகக்கடுமையான சட்டப்பிரிவு போடப்பட்டுள்ளது. அவர்களுக்காகவும் குறிப்பாக துஆ செய்யுங்கள். கடந்த நாட்களில் ரமஸான் பீபீ சாஹிபா என்ற பெண்மணியை, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுத்துவத்தை அவமதித்த சட்டப்பிரிவில் கைது செய்து ஜெயிலில் அடைத்துள்ளார்கள். அவர்களின் குடும்பம் 2002 ஆம் ஆண்டு பைஅத் செய்தது.

அப்பெண்ணின் கணவர் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில், நாங்கள் தியாகத்தைக் கண்டு அஞ்சவில்லை. ஜெயிலுக்கு செல்வதைப் பற்றிய துக்கமில்லை. எனக்கும் என் மனைவிக்கும் இருக்கின்ற கவலை என்னவென்றால், எந்த நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்திற்காகவும், பெயருக்காகவும் நாங்கள் உயிரை இழக்க ஆயத்தமாக உள்ளோமோ அந்த நபியை அவமதித்தாக எங்கள்மீது பழி சுமத்தப்பட்டுள்ளது. இந்த வேதனைதான் எங்களுக்கு உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, இவர்களையும், இந்த குற்றச்சாட்டின் காரணமாக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளையும் எப்பொழுதும் உங்களுடைய துஆவில் நினைவு கூருங்கள். அவர்கள் அனைவரின் விடுதலைக்கும் அல்லாஹ் அற்புதமான ஏற்பாடுகளைச் செய்வானாக. மேலும் தனது கருணையை வழங்குவானாக. நீதியில் நிலைபெறும் வாய்ப்பை நீதிமன்றத்திற்கும், அரசாங்கத்திற்கும் வழங்குவானாக.

இவர்கள் இறைவன் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் பெயரைக் கூறுகின்றார்கள். இறைவன் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் உண்மையான அச்சமும் நேசமும் அவர்களிடத்தில் உருவாகட்டுமாக. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியின்படி செயல்படக் கூடியவர்களாகவும் இருப்பார்களாக.

இதுதவிர இன்னும் சில துஆக்களின் பக்கமும் நான் கவனமூட்ட விரும்புகிறேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை அடையாளங்கண்டு கொள்ளும் நல்வாய்ப்பை அல்லாஹ் நம்மில் ஒவ்வொருவருக்கும் வழங்குவானாக. அல்லாஹ் மற்றும் அவனது தூதர் ஹஸ்ரத் காத்துமுல் அன்பியா முஹம்மது (ஸல்) அவர்களின் நேசம் அனைத்து நேசத்தின் மீதும் மிகைக்கட்டுமாக. இஸ்லாத்தினுடைய உண்மையான போதனைகளின்படி செயல்படக் கூடியவர்களாக நாம் இருப்போமாக. அன்பு நேசத்தின் முன்மாதிரியாக நமது வீடு திகழட்டுமாக.

தாய் தந்தையருக்கிடையிலான சண்டையின் காரணமாக எந்த குழந்தைகள் மன உளைச்சலுக்கு அளாகி உள்ளார்களோ அவர்களின் மன உளைச்சலையும் அல்லாஹ் நீக்குவானாக. வாழ்வை அர்ப்பணித்த அனைவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். தன்னலமற்ற முறையில் மார்க்கத் தொண்டாற்றும் வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக. அவர்கள் தமது வக்ஃபை அர்ப்பணிப்பை நிறைவேற்றக் கூடியவர்களாக இருப்பார்களாக. வக்ஃபே நவ்வில் உள்ளவர்களுக்காக துஆ செய்யுங்கள். தம்முடைய வாக்குறுதியையும், தம்முடைய தாய் தந்தையரின் வாக்குறுகுதியையும் நிறைவேற்றக்கூடிய வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக.

அஹ்மதி ஷஹீதுகளுக்காகவும் அவர்களின் குடும்பத்திற்காகவும் துஆ செய்யுங்கள். கஷ்டத்தில் சிக்கியுள்ள அனைத்து அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். தமக்காகவும், மற்றவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். மற்றவர்களுக்காக செய்யக்கூடிய இந்த துஆக்கள் அல்லாஹ்வின் அருளை பெறக்கூடியதாக ஆக்கிக் கொண்டே செல்லும். பெண் பிள்ளைகளுக்காகவும் அவர்களின் திருமண சம்பந்தத்திற்காகவும் துஆ செய்யுங்கள். காரணமில்லாமல் தாமதமாகும் பெண் பிள்ளைகளின் திருமண சம்பந்தத்திற்காக குறிப்பாக துஆ செய்யுங்கள்.

இந்த சூழலில் இதற்குப் பிறகு உலகில் ஏற்பட இருக்கும் வாழ்வாதார நிலையின் தீய விளைவுகளிலிருந்து ஒவ்வொரு அஹ்மதியும் பாதுகாப்பாக இருப்பதற்காக துஆ செய்யுங்கள். இந்த சூழ்நிலையின் காரணமாக ஜமாஅத்தின் வேலைகளிலோ திட்டங்களிலோ எந்தவொரு தடையும் ஏற்பட்டு விடக்கூடாது. அல்லாஹ் தனது அருளால் ஜமாஅத்தினுடைய முன்னேற்றத்தின் வழிவகைகளை ஏற்பாடு செய்து கொண்டே செல்வானாக. இந்த சூழலில் பொருள் தியாகம் செய்யக் கூடியவர்களுக்காகவும் அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் செல்வத்திலும் உயிரிலும் எண்ணற்ற அருள்களை வழங்குவானாக.

MTA வின் பணியாளர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அதில் தன்னார்வத் தொண்டர்களும் இருக்கின்றார்கள். பணிபுரியக் கூடியவர்களும் இருக்கின்றார்கள். மிகவும் உழைப்புடன் தமது தொண்டை நிறைவேற்றுகின்றார்கள். மேலும் இஸ்லாத்தின் தூதுத் செய்தியை உலகில் பரப்புகிறார்கள். இஸ்லாமிய உலகத்திற்காக துஆ செய்யுங்கள். அவர்களின் உட்பூசல்கள் முடிவுக்கு வரட்டுமாக. அமைதியான முறையில் வாழ கற்றுக் கொள்ளட்டுமாக. அவர்களையும், இஸ்லாத்தின் எதிர் சக்திகளின் தீமையிலிருந்து அல்லாஹ் பாதுகாப்பானாக. அவர்களுக்கிடையே உள்ள உட்பூசல்கள் முடிவுக்கு வரும்போதுதான் இது நடைபெறும்.

இன்னும் சில துஆக்கள் உள்ளன. அவற்றையும் நான் இப்போது ஓதுவேன். நீங்களும் என்னுடன் சேர்ந்து அவற்றை திரும்பக் கூறுங்கள்.

اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

அல்லாஹ்வே உன்னையே அவர்களின் உள்ளங்களில் வைக்கிறோம். அதாவது உனது திகில் அவர்களின் நெஞ்சங்களில் நிறைந்து விட வேண்டும். அவர்களின் தீமையிலிருந்து நாங்கள் உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறோம்.

(சுனன் அபீதாவூது, கிதாபுல் வித்ர்... ஹதிஸ் எண் 1537)

அல்லாஹ்வை தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை. அவன் கண்ணியத்திற்குரியவனும், பொறுமையாளனும் ஆவான். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை. அவனே அரியணையின் இறைவனாவான். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை. அவனே வானங்கள், பூமி மற்றும் அரியணையின் இறைவனாவான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தஃவாத்... ஹதீஸ் எண் 6346)

## திருக்குர்ஆனிலிருந்து...

அந்தோ! நிராகரிப்பவர்களின் உயிரை வானவர்கள் கைப்பற்றும் நேரத்தை நீர் கற்பனை செய்து பார்க்க வேண்டுமே! (வானவர்கள்) அவர்களின் முகங்களிலும், முதுகுகளிலும் அடித்துக் கொண்டிருப்பார்கள். எரிக்கும் தண்டனையைச் சுவைத்துப் பாருங்கள் (என்றும் கூறிக் கொண்டிருப்பார்கள்). (8:51)

A.Basheer Ahmad, Melapalayam

يَا مُقَلِّبَ الْقُلُوْبِ ثَبِّتْ قَلْبِيْ عَلٰى دِيْنِكَ۔

உள்ளங்களை புரட்டக் கூடியவனே! எனது உள்ளத்தை உனது மார்க்கத்தில் நிலைபெறச் செய்வாயாக.

(சனன் திர்மிதி... ஹதீஸ் எண் 2140)

அல்லாஹ்வே நான் உன்னிடம் வழிகாட்டலையும், இறையச்சத்தையும், கண்ணியத்தையும், போதுமென்ற மனதையும் வேண்டுகிறேன்.

اَللّٰهُمَّ اِنِّیْ اَسْئَلُكَ الْهُدٰى وَالتُّقٰى وَالْعَفَافَ وَالْغِنٰى

அல்லாஹ்வே! உனது அருள் விலகுவதிலிருந்தும், உனது பாதுகாப்பு விலகிக் கொள்வதிலிருந்தும், திடீரென உனது தண்டனை வருவதிலிருநதும், நீ கோபப்படுகின்ற அனைத்து விஷயங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்பு கேட்கிறேன்.

(சஹீஹ் முஸ்லிம்... ஹதீஸ் எண் 2739)

رَبَّنَا ظَلَمْنَآ اَنْفُسَنَا ٚ وَاِنْ لَّمْ تَغْفِرْ لَنَا وَتَرْحَمْنَا لَنَكُوْنَنَّ مِنَ الْخٰسِرِيْنَ

எங்களுடைய இறைவா! நாங்கள் எங்கள் மீது அநீதியிழைத்து விட்டோம். நீ எங்களை மன்னிக்காவிட்டால், எங்களின் மீது கருணை காட்டாவிட்டால் நாங்கள் நஷ்டமடைந்தவர்களைச் சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

رَبَّنَا لَا تُزِغْ قُلُوْبَنَا بَعْدَ اِذْ هَدَيْتَنَا وَهَبْ لَنَا مِنْ لَّدُنْكَ رَحْمَةً ۚ اِنَّكَ اَنْتَ الْوَهَّابُ

எங்களுடைய இறைவா! நீ எங்களுக்கு நேர்வழி வழங்கிய பின்னர் எங்களுடைய உள்ளத்தை கோணலாக்காதிருப்பாயாக. உன்னிடமிருந்து எங்களுக்கு அருளை வழங்குவாயாக. நிச்சயமாக நீ அதிகமாக வழங்கக்கூடியவனாவாய். (3:9)

رَبَّنَآ اٰتِنَا فِی الدُّنْيَا حَسَنَةً وَّ فِی الْاٰخِرَةِ حَسَنَةً وَّ قِنَا عَذَابَ النَّارِ

எங்களுடைய இறைவா! எங்களுக்கு உலகிலும் வெற்றியை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியை வழங்குவாயாக. மேலும் எங்களை நெருப்பிலிருந்து பாதுகாப்பாயாக. (2:202)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு துஆ உள்ளது. அன்னார் கூறுகின்றார்கள்:

உலகங்களின் இறைவா! உனது கருணைகளுக்கான நன்றியை (முழுவதுமாக) என்னால் கூற இயலாது. நீ மேன்மேலும் கருணை காட்டக் கூடியவனும், பெருந்தன்மையுடையவனுமாவாய். உனது அளவற்ற கருணை என்மீது உள்ளது. நான் அழிந்து விடாமல் இருப்பதற்காக எனது பாவங்களை மன்னிப்பாயாக. எனக்கு வாழ்வு கிடைப்பதற்காக உனது தூய நேசத்தை எனது உள்ளத்தில் இடுவாயாக. மேலும் எனது (குறைகளை) மூடி மறைப்பாயாக. நீ திருப்திப்படுகின்ற செயல்களை என்னை செய்ய வைப்பாயாக. உனது கோபம் என்மீது இறங்குவதிலிருந்தும் நான் உனது பெருந்தன்மையைக் கொண்டு உன்னிடம் பாதுகாப்பு தேடுகிறேன். கருணை காட்டுவாயாக! கருணை காட்டுவாயாக! கருணை காட்டுவாயாக! உலகின் சோதனைகளிலிருந்தும், மறுமையின் சோதனைகளிலிருந்தும் என்னைக் காப்பாற்றுவாயாக. ஏனென்றால் எல்லாவித அருள்களும், கருணையும் உன்னிடத்திலேயே உள்ளது. ஆமீன்.

(மக்தூபாத்தே அஹ்மது (அலை), தொகுதி 2 பக்கம் 159, ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் (ரலி) அவர்களுக்கு எழுதியது, கடிதம் எண் 3)

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ۔ اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ۔

இது இந்த ரமலானின் கடைசி ஜுமுஆவாகும். இந்த ரமலானில் நாம் செய்த நன்மைகளை அல்லது நாம் உருவாக்கிய மாற்றங்களை தொடரச் செய்வதற்கு அல்லாஹ் நமக்கு நற்பாக்கியத்தை தந்தருள்வானாக. இந்த துஆக்களையும் நம் சார்பில் ஏற்றுக் கொள்ளப்படட்டுமாக.

பெருநாள் பற்றியும் நான் கூறி விடுகிறேன். இங்குள்ள வெப்சைட்டின் அடிப்படையில் 24 ஆம் தேதி பெருநாள் கொண்டாட இருக்கிறோம். ஆனால் 24 ஆம் தேதி பெருநாள் இல்லை ஞாயிற்றுக்கிழமை பிறை தென்படாது என்று பல மக்கள் எனக்கு கடிதம் எழுதியுள்ளார்கள்.

நான் மீண்டும் கடிதம் எழுதினேன். இவ்வாறு 2,3 முறை மீண்டும் மீட்டிங் நடைபெற்றது. இங்கு இருக்கின்ற நமது வல்லுநர்களையும் மேலும் சில மக்களையும் இணைத்துக் கொண்டோம். நீங்களும் பாருங்கள் என அமீர் சாஹிப் அவர்களுக்கு நானும் கூறினேன். அவர்கள் ஒரு வரைபடம் தயாரித்து எனக்கு அனுப்பி வைத்தார்கள். வெப்சைட்டில் இருக்கக்கூடிய பெரும் நகரங்களில் 23 ஆம் தேதி நிச்சயமாக பிறை தென்பட வாய்ப்பில்லை.

ஆனால் அமீர் சாஹிப் அவர்கள் அனுப்பித்தந்த வரைபடத்தில் சில இடங்களில் ஃபால்மத், பென்சென்ஸ் மற்றும் ஹேல் போன்ற சில இடங்களில் 23 ஆம் தேதி கண்களால் பிறையை காண இயலும். ஒரு நாட்டின் ஒரு பகுதியில் பிறை தென்படும் என்றால் அந்த நாட்டின் மற்ற இடங்களில் பெருநாளை கொண்டாட முடியும். முஸ்லிம் நாடுகளிலுள்ள பிறை கமிட்டிகளும் இவ்வாறே ஆய்வை மேற்கொள்கின்றன.

எவ்வாறிருப்பினும் இந்த ஆய்வுக்குப் பிறகு 2,3 முறை மறுபடியும் ஆய்வை மேற்கொண்ட பிறகு இன்ஷா அல்லாஹ் 24 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று பெருநாள் கொண்டாடலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அல் ஃபஸல் இன்டர்நேஷனல் 12 ஜூன் 2020 பக்கம் 5–5)

......☆......☆......☆......

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் நம்பிக்கை கொண்டு இடம்பெயர்ந்து சென்று அல்லாஹ்வின் வழியில் அறப்போர் செய்தவர்களும், (இடம் பெயர்ந்து சென்றோருக்கு) இடமளித்து (அவர்களுக்கு) உதவி செய்தவர்களுமாகிய இவர்களே உண்மையான நம்பிக்கை கொண்டவர்களாவர். இவர்களுக்குப் பாவமன்னிப்பும் கண்ணியமான உணவும் கிடைக்கும். (8:75)

M.Y. Shahul Hameed, Melapalayam

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 25 June 2020 Issue No. 26

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களது ஐரோப்பா சுற்றுப் பயணம் (செப்டம்பர் & அக்டோபர் 2019)

♦ மீர்பூரிலிருந்து வந்திருந்த காலித் அஹ்மது சட்டா சாஹிப் கூறுகின்றார்:

இன்று எனது மனதிற்கு நிம்மதி கிடைத்துள்ளது. பாகிஸ்தானில் நான் இருக்கின்ற இடத்திலிருந்து ஒரு சாதாரண மனிதர் வருவது கூட மிகவும் கடினமாகும். எனக்கு ஹுஸூர் அவர்களை சந்திக்க வேண்டும் என்ற கடுமையான விருப்பம் இருந்தது. நாங்கள் MTA வில் ஹுஸூர் அவர்களைப் பார்த்து வந்துள்ளோம். இறைவன் கடுமையான கஷ்டத்திற்குப் பிறகு இங்கு வருவதற்கான ஏற்பாட்டைச் செய்தான். மேலும் இன்று எனது விருப்பம் நிறைவேறி விட்டது. இதற்கு என்னால் ஒருபோதும் நன்றி செலுத்தி விட முடியாது.

♦ டாக்டர் கைஸர் ஹரம் சாஹிப் கூறுகின்றார்:

நான் 2003 ஆம் ஆண்டு பைஅத் செய்தேன். பிறகு எனது தாயும் பைஅத் செய்தார்கள். பிறகு மனைவியும் பைஅத் செய்தார்கள். இன்று நான் மிகவும் நற்பேறு பெற்ற மனிதன் ஆவேன். எனக்கு ஹுஸூர் அவர்களை சந்திப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. நான் எனது வாழ்நாளில் இவ்வளவு அருகில் ஹுஸூர் அவர்களை முதல் முறையாக இப்போதுதான் பார்த்துள்ளேன். என்ன பேசுவது என்று எனக்கு புரியவில்லை. எனது தந்தைக்கு நேர்வழி கிடைப்பதற்காக துஆ செய்யுங்கள். அவர்களும் அஹ்மதி ஆக வேண்டும் என்று கூறினேன்.

ஹுஸூர் அவர்களை சந்தித்த பிறகு நான் எனக்குள் தூய்மையாகி விட்டதைப் போன்றும், நான் மாறி விட்டதைப் போன்றும் உணர்ந்தேன். ஹுஸூர் அவர்களுடனான சந்திப்பு ஒரு நிமிடத்தை விட குறைவானதாகவே இருந்தது. ஆனால் அந்த நொடிப்பொழுது கூட என்னை மாற்றி விட்டது. எனது இறைவன் எனக்கு அனைத்தையும் வழங்கி விட்டான்.

சந்திப்பிற்கான இந்த நிகழ்ச்சி 8.10 வரை நீடித்தது. இதற்குப் பிறகு சிறது நேரம் ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்குச் சென்றார்கள். பிறகு மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளுக்கான ஏற்பாடு பைத்துன் நூர் பள்ளிவாசலை ஒட்டியுள்ள பெண்கள் திடலில் செய்யப்பட்டிருந்தது. பைத்துன் நூர் பள்ளிவாசலில் பெண்களுக்கு தொழுகைக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**ஆமீன் நிகழ்ச்சி**

இன்று குழந்தைகளின் ஆமீன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சி பைத்துன் நூரில் நடந்தது. நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 8.30 மணிக்கு ஹுஸூர் அவர்கள் பைத்துன் நூர் பள்ளிவாசலுக்கு வருகை தந்தார்கள். மேலும் ஆமீன் நிகழ்ச்சி ஆரம்பமானது. கீழ்க்கண்ட 30 குழந்தைகள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். ஹுஸூர் அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு வசனத்தை கேட்டார்கள். இறுதியில் துஆ செய்தார்கள்.

குழந்தைகளின் பெயர்கள் இவ்வாறாகும்:

- வர்தா காஷிஃப்
- மஹ்வஷ் நுஃமானா ஆரிஃப்
- மன்ஸா அஸ்கர் மும்தாஸ்
- மாரியா நஸீர்
- ஸஹ்ர் ரானா
- சானியா சித்தீக்கி
- காஷிஃபத்துன் நூர் மஹ்பூப்
- அனீஸா இம்ரான் சவுத்ரி
- ஃபாத்திஹா ஆமிர்
- இனாயா அலி
- நாஜியா அஸ்லம்
- தானியா அஹ்மது பட்
- ஆயிஷா சுல்தான்
- அத்யத்துல் பாஸித்
- நமூதே சஹ்ர் மஹ்மூத்
- நூர் ஹயா மன்னான்
- அதீலா ஃபாரூக்
- ஹிபத்துல் பஸீர் மலிக்
- ஆஸிஃப் மலிக்
- தாஹிரா
- நூர் அக்மல்
- சப்கத்துல் முகீத்
- மனாஹில் மன்ஸூர்
- சானிஹா தாஹிர்
- அனோஷ் ஷகி
- தரேஷா அன்ஜம்
- உரூஜ் மீர்
- ஆரிஃபா முபஷ்ஷிர் ஆரிஃப்
- ஜாஸிபா கமால் காஸி
- அத்யத்துஸ் சுபூஹ்

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் மாநாட்டுத் திடலுக்கு வருகை தந்தார்கள். மேலும் மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளுக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு சென்றார்கள்.

(உருது பத்ர் 14 நவம்பர் 2019 – தொடரும்...)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad